## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1)** இந்தியாவில் தேர்தல் தூதுவராக நியமிக்கப் பட்ட முதல் திருநங்கை யார்?

**[A]** லட்சுமி நாராயண் திரிபாதி

**[B]** பிரித்திகா யாஷினி

**[C]** மது பாய் கின்னார்

**[D]** கவுரி சாவந்த்

✓ இந்திய தேர்தல் ஆணையம், மகாராஷ்டிராவின் **12** தேர்தல் தூதுவர்களில் ஒருவராக சமூக செயல்பாட்டாளர், திருநங்கை கவுரி சாவந்த் - ஐ நியமித்துள்ளது. இந்தியாவில் தேர்தல் தூதுவராக ஒரு திருநங்கை நியமிக்கப் படுவது இதுவே முதல் முறை.

✓ இந்திய தேர்தல் ஆணைய கூற்றின்படி, கவுரி சாவந்தின் நியமனம், திருநங்கை பாலினத்தவரின் வாக்காளர் சேர்க்கையை அதிகரிக்க உதவும் என்று கூறப்படுகிறது. வருகின்ற நாட்களில் கவுரி சாவந்த் ஒவ்வொரு திருநங்கைகளை சந்தித்து வாக்களிப்பதன் தேவையை விளக்கி ஊக்குவிப்பார் என்று கூறப்படுகிறது,

✓ கடந்த **2004, 2009** லோக் சபா தேர்தல்களில், ஒரு திருநங்கை வாக்காளர் பெயர் கூட பதிவு செய்யப்படவில்லை. இந்திய உச்ச நீதிமன்ற உத்தரவின் படி இல் திருநங்கைகளுக்கு ஓட்டுரிமை முதல் முறையாக **2014** இல் வழங்கப் பட்டது. அதன் படி **2014** இல், **918** திருநங்கை வாக்காளர்கள் பதிவுசெய்திருந்தனர். இந்த எண்ணிக்கை கடந்த **5** ஆண்டுகளில் இரட்டிப்பாகி இப்போது **2086** ஆக உயர்ந்திருக்கிறது.

✓ பிவாண்டி, கல்யாண் கிழக்கு மும்பை தொகுதிகளில் முறையே **113,184,123** திருநங்கை வாக்காளர்கள் பதிவு செய்திருந்தனர். வடக்கு மும்பை தொகுதியில் அதிக பட்சமாக **324**வாக்காளர்கள் பதிவு நடந்துள்ளது.

✓ இந்திய தேர்தல் ஆணைய கூற்றின்படி, கவுரி சாவந்தின் நியமனம், திருநங்கை பாலினத்தவரின் வாக்காளர் சேர்க்கையை அதிகரிக்க உதவும். வருகின்ற நாட்களில் கவுரி சாவந்த் ஒவ்வொரு திருநங்கைகளையும் சந்தித்து வாக்களிப்பதன் தேவையை விளக்கி ஊக்குவிப்பார் என்று கூறப்படுகிறது,

**2) 2019** ஆண்டு "கணிதத்திற்கான ஆபேல் பரிசு" பெற்றவர் யார்? **Who is the recipient of the 2019 Abel Prize for mathematics?**

**[A]** ஜான் நாஷ்

**[B]** கரேன் உக்லென்பேக்

[C] ராபர்ட் லாங்கன்ட்ஸ்

[D] ஜாக்வஸ் டிட்ஸ்

- ✓ பேராசிரியர் கரேன் உக்லென்பேக், ஆஸ்டின் பகுதியைச் சேர்ந்தவர். டெக்ஸாஸ் பல்கலைக்கழக பேராசிரியரான இவர் தான் உலகின் மிகவும் மதிக்கப்பட்ட கணித துறைக்கான ஆபேல் விருதைப் பெரும் முதல் பெண்மணி ஆவார்.
- ✓ ஆபேல் பரிசு கணிதத்திற்கான நோபல் பரிசு என்று அழைக்கப்படுகிறது.
- ✓ நோர்வேஜிய கணித அறிஞரான நீல்ஸ் ஹென்ரிக் ஆபேல் நினைவாக இப்பரிசு **2003** ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது .
- ✓ **geometric partial differential equations, gauge theory** மற்றும் **integrable systems and for the fundamental impact of her work on analysis, geometry and mathematical physics** போன்ற துறைகளில் இவரது பங்களிப்புக்காக **6** மில்லியன் நார்வேஜியன் குரோனர்கள் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**3) WIPO's Patent Cooperation Treaty (PCT)**இன் அறிக்கையின் படி **2018** ஆம் ஆண்டு எந்த நாடு அதிக காப்புரிமைகளை பதிவு செய்துள்ளது**?**

[A] சீனா

[B] ஐக்கிய நாடுகள்

[C] ஜப்பான்

[D] இந்தியா

- ✓ **WIPO's Patent Cooperation Treaty (PCT)**தனது உறுப்பினர் நாடுகள் **2018**இல் பதிவு செய்த காப்புரிமைகளைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டது.
- ✓ இந்த அறிக்கையின்படி ஐக்கியநாடுகள் காப்புரிமைகளை பதிவு செய்வதில் முன்னிலை வகிக்கிறது.
- ✓ ஆனால் பிராந்திய அடிப்படையில் ஆசியாவின் முன்னேற்றம் தொடர்கிறது. இது அறிவியல் கண்டுபிடிப்புகளின் திசை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி மாறி வருவதன் அடையாளம்.கடந்தாண்டு பதிவு செய்யப்பட்ட காப்புரிமைகளில் சரி பாதி ஆசியாவிலிருந்து பதிவுசெய்யப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.
- ✓ இந்த அறிக்கையின்படி ஐக்கிய நாடுகள் அதிகபட்சமாக **56,142** காப்புரிமை விண்ணப்பங்களையும், சீனா **53,345** விண்ணப்பங்களையும் அடுத்தததாக ஜப்பான் **49,702** விண்ணப்பங்களையும் செய்துள்ளன.
- ✓ ஜெர்மனியும் தென்கொரியாவும் அடுத்தடுத்த இடங்களை **20000**க்கும் குறைவான விண்ணப்பங்களோடு பிடித்துள்ளன. இந்தியா வேறெந்த நாடுகளையும் விட கடந்த ஆண்டுகளில்

செய்த விண்ணப்பங்களைக் காட்டிலும் **27**சதவீதம் அதிகமாக பதிந்துள்ளது. **2017**இல் செய்த **1583** விண்ணப்பங்களை விட **27**சதவீதம் அதிகமாக இம்முறை **2013** விண்ணப்பங்களையும் செய்துஉள்ளது.

- ✓ சீனா தொலைத்தொடர்பு நிறுவனம் பெஹெமோத் ஹவாய் , தனியொரு நிறுவனங்கள் செய்த விண்ணப்பங்களிலேயே அதிகபட்சமாக **5405** விண்ணப்பங்களை செயதுள்ளது. காப்புரிமை பதிவு விண்ணப்பங்கள் ஒரு நாட்டில் அறிவியலும் தொழில்நுட்பமும் எந்தளவிற்கு வளர்ந்துள்ளன என்பதன் சான்று.
- ✓ காப்புரிமை பாதுகாப்பு கண்டுபிடிப்பாளருக்கு தனது கண்டுபிடிப்பின் மீது ஏகபோக தனியுரிமையையும் வழங்குகிறது.

**4) 2019** ஆண்டு உலக குருவிகள் தினத்தின் கருப்பொருள் என்ன **? What is the theme of the 2019 World Sparrow Day (WSD)?**

**[A]** குருவிகளை காப்போம் - **Save Sparrows**

**[B]** வீட்டுக் குருவிகளை காப்போம் - **Protect House Sparrows**

**[C]** நான் சிட்டுக்குருவிகளை விரும்புகிறேன் - **I love sparrows**

**[D]** குருவிகள்: சுழலியலின் நாயகர்கள் - **Sparrows: Heroes of the Environment**

- ✓ உலக குருவிகள் தினம் ஒவ்வொரு மார்ச் ஆம் தேதியும் உலகெங்கும் இருக்கும் சின்ன பறவையினங்களையும் காக்கவும், அவற்றின் இருப்பிடங்களை காக்கவும் பொருட்டு கொண்டாடப் படுகிறது.
- ✓ வீட்டு குருவிகள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. கருப்பொருள், மக்களுக்கும் குருவிகளுக்கு இடையேயான உறவை வளர்க்கும் பொருட்டும் கொண்டாடும் பொருட்டும் நடத்தப்படுகிறது.
- ✓ மொஹம்மத் திலாவர் என்ற சுற்றுசூழல் ஆர்வலர் துவக்கிய தான் இந்த முயற்சியை துவக்கியது. அவர் நாசிக்கில் உள்ள வீட்டு குருவிகளுக்களை காக்க உதவி செய்தார். டைம் இதழின் ஆம் ஆண்டுக்கான "சூழலியல் நாயகர்கள்" விருதினைப் பெற்றார்.
- ✓ இத்தினத்தை கொண்டாடும் எண்ணம் எதே ச் சையாக அலுவலகத்தில் தோன்றியது.வீட்டு குருவிகளையும் மற்ற சிறு பறவையினங்களையும் பாதுகாக்கும் பொருட்டும் , நம் சுற்றுசூழலின் அழகை கொண்டாடும் பொருட்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- ✓ உலக குருவிகள் தினம் முதல் முதலாக **2010**ஆம் ஆண்டு உலகின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டது. தன்னலமில்லாமல் சுற்றுசூழலை பாதுகாக்கவும் இம்முயற்சிகளை ஊக்குவிக்கவும் குஜராத் அஹமதபாத் நகரில் கடந்த **20 march 2011** முதல் **"Sparrow awards"**வழங்கி வருகிறது.

**5) சீனாவின் ambitious Belt and Road initiative திட்டத்தில் சமீபத்தில் இணைந்த நாடு எது?**

**[A]** ஐக்கிய நாடுகள்

**[B]** இந்தியா

**[C]** பிரான்ஸ்

**[D]** இத்தாலி

- ✓ சமீபத்தில் **"Italian Premier Premier Giuseppe Conte** "இத்தாலியை, ஐக்கிய நாடுகளின் பலத்த எதிர்ப்பையும், மீறி தனது உறுப்பினர் நாடுகளில் முதல் நாடாக சீனாவின் **ambitious Belt and Road initiative** திட்டத்திற்குள் இணைக்க முடிவெடுத்தது .
- ✓ இந்தியா கடந்த மார்ச் **20,2019** இல் இரண்டாவது முறையாக **China's second Belt and Road Forum (BRF)** ஐ புறக்கணித்தது.
- ✓ எல்லைப்பகுதி ஒற்றுமையையும், தேசங்களின் இறையாண்மையையும் குலைக்கும் எந்த முயற்சிக்கும் , எந்த நாடுகளும் பங்குபெறக்கூடாது. இந்தியா **2017** இல் **BRF**ஐ புறக்கணித்தது . இந்திய இறையாண்மையை மீறும் விதமாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் வழியாக செல்லும் சீனா-பாகிஸ்தான் **Economic Corridor (CPEC)** திட்டத்தை, இந்தியா எதிர்த்தது .
- ✓ சீனா ஏற்கனவே பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள **CPEC** திட்டத்தை நிறைவேற்ற சீரிய முயற்சிகளை எடுக்கத் துவங்கிவிட்டது. சீனாவின் ஷின் ஜியாங் மாகாணத்தையும் பாகிஸ்தானின் குவாடர் துறைமுகத்தையும் இணைக்கும் சாலையை அமைக்க இருக்கிறது. இவ்வழியில் ரயில் பாதையும், எரிவாயு, எண்ணெய் குழாய்களையும் அமைக்க இருக்கிறது.

**6) 2019 ஆம் ஆண்டின் உலக மகிழ்ச்சி தினத்தின் ( IDH-2019) கருப்பொருள் என்ன?**

**[A]** மகிழ்ச்சியைப் பகிர்வோம் - **Share Happiness**

**[B]** இணைந்திருந்து மகிழ்வோம் - **Happier Together**

**[C]** மகிழ்ச்சியாக வாழ்வோம் - **Live Happier**

**[D]** கோப பறவைகள் இனிய கிரகம் - **Angry birds happy planet**

- ✓ உலக மகிழ்ச்சி தினம் உலகெங்கும் மார்ச் **20**தேதி கொண்டாடப் படுகிறது. உலக மக்களின் வாழ்வில், மகிழ்ச்சியின் முக்கியதுவத்தை எடுத்துச் சொல்லும் தினமாக இருக்கிறது. உலகம் எப்படி மாறிக்கொண்டே இருக்கிறது என்பதை நினைவுறுத்தும் தினமாக இருக்கிறது.
- ✓ நாம் எப்படி முன்னேறினோம், எதனால் வீழ்ந்தோம் , எப்படி நம் வாழ்க்கை தரத்தை உயர்த்தினோம் என்பதற்கான விடையைத் தேடுவோமானால் , மகிழ்ச்சி என்பதே அதன் விடையாக இருக்கும்,

✓ ஆண்டின் கருப்பொருளான "இணைந்திருந்து மகிழ்வோம்" உலகமக்களின் வேற்றுமைகளை விடுத்து , ஒற்றுமைக ளின்மீதே கவனம் கொள்கிறது. இத்தினம் **193 UN** உறுப்பினர் நாடுகளிலும் கொண்டாடப் படுகிறது

7) "மித்ரா ஷக்தி-VI" இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையேயான கூட்டு இராணுவ பயிற்சி திட்டம்?

[A] ஸ்ரீலங்கா

**[B]** பூட்டான்

**[C]** நேபால்

**[D]** பங்களாதேஷ்

✓ இராணுவ ராஜதந்திரங்களின் ஒரு பகுதியாகவும், இந்திய ஸ்ரீலங்கா இராணுவத்திடையே நல்லுறவை மேம்படுத்தவும் "மித்ரா ஷக்தி-**VI**" வருடந்தோறும் நடத்தப்படுகிறது.

✓ ஸ்ரீலங்காவில் இந்த வருடம் **2018-2019**, **26** மார்ச் இருந்து ஏப்ரல் **8** வரை இந்த கூட்டு இராணுவப் பயிற்சி நடைபெறும். இந்திய ராணுவத்தின் பிகார் ரெஜிமென்டின் முதல் பட்டாலியனும், ஸ்ரீலங்காவின் பட்டாலியனும் இந்த கூட்டு பயிற்சியை மேற்கொள்கின்றன.

✓ இந்த கூட்டு பயிற்சியின் நோக்கம் இரு இராணுவங்களுக்கிடையேயான நல்லுறவை பேணுவதும் , இரு நாடுகளுக்கிடையேயான இராணுவங்களின் திறனை மேம்படுத்தவும், இராணுவங்களை ஒருங்கிணைக்கவும் ஆகும்.

✓ ஐக்கிய நாடுகளின் கட்டாய அழைப்பின்படி, இப்பயிற்சியில் சர்வதேச அளவில் அச்சுறுத்தல்களையும், தீவிரவாத சூழலை எதிர்க்கவும், தீவிரமான பயிற்சிகள் வழங்கப் படும்.

8) சமீபத்திய செய்திகளில் அறியப்பட்ட நூர்சுல்தான் நாசர்பாயேவ் எந்நாட்டவர்?

**[A]** ஆஃப்கானிஸ்தான்

**[B]** கிர்கிஸ்தான்

[C] கஜகஸ்தான்

**[D]** தஷிகிஷ்தான்

✓ நெடுநாள் பங்களிப்பைச் செய்துவரும் பிந்தைய சோவியத் தலைவர் நூர்சுல்தான் நாசர்பாயேவ், எதிர்பாராவிதமாய் **29**ஆண்டுகளாய் வகித்துவந்த கஜகஸ்தான் அதிபர் பதவியை திடுக்கிடும்படியாக ஒரு பொதுக்கூட்டத்தில் வைத்து மக்கள் முன்னிலையில் இராஜினாமா செய்தார்.

✓ இருப்பினும் நாட்டின் வலியையான "பாதுகாப்பு சபையின்" தலைவராகவே நீடிப்பார், பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தும் நூர் ஒட்டன் கட்சியின் தலைவராகவும், நாட்டின் தலைவர்

என்ற பட்டத்தோடும் நீடிப்பார். **2014** நடந்த எண்ணெய் விலை வீழ்ச்சியிலிருந்து மீண்டு வர திணறும் பொருளாதாரமும் அதனால் ஏற்பட்ட சமூக அதிருப்தியுமே அவரது பதவிவிலகலுக்குக் காரணம்.

- ✓ பாராளுமன்ற மேலவை சபாநாயகர் கஸ்யம் ஜுமார்ட் டோக்கயேவ் தனது பதவிக்காலம் முடியும் வரை தற்காலிக அதிபராக பணியாற்றுவார்.
- ✓ எண்ணெய் வளமும், எரிவாயு வளமும் நிறைந்த கசகஸ்தானின் தந்தை என்று அறியப்பட்ட நூர்சுல்தான், **1989**இல் கஜகஸ்தான் சோவியத் ருஸ்யாவின் பகுதியாக இருந்த போது இருந்து கஜகஸ்தான் தனியாக ஆன பிறகும் இன்று வரை ஆண்டு வருகிறார். கசகஸ்தானின் அதிபராக **1990**ஆம் ஆண்டு இருந்து பணியாற்றுகிறார். சோவியத் யூனியன் வீழ்ந்த **1991**ஆம் ஆண்டிற்கு பிறகு முறைப்படி அதிபர் தேர்தலில் நின்று வென்றார்.

**9)** பின்வருவனவற்றுள் எந்த நிறுவனம் ஸ்மார்ட் ஸ்டீல் குப்பைக்கூடைகளை உருவாக்கியது**?**

**[A] Essar steel**
**[B] Tata steel**
**[C] SAIL**
**[D] RINL**

- ✓ ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா நிறுவனம் **(SAIL)** ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீலில் செய்த ஸ்மார்ட் குப்பைத் தொட்டிகளை உருவாக்கியிருக்கிறது. இக் குப்பைத் தொட்டிகள் நிறையும் போது, குப்பைகள் சேகரிக்கும் வண்டிகளுக்கு சிக்னல் அனுப்பும் படி வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குப்பை சேகரிக்கும் செயல்முறையை முன்னேற்றவும், மனித இடையீட்டைக் குறைக்கவும் முடியும்.
- ✓ **SAIL salem stainless steel** கொண்டு உருவாக்கப்படும் இந்த குப்பைத்தொட்டிகள், **smart** கார்பேஜ் ஸ்டேசன்களில், **underground reinforces** சிமெண்ட் கான்க்ரிட் தளத்தில் பொறுத்தப்படும். இதன் மூலம் குப்பைகளின் துற்நாற்றமும் அதன்மூலம் பரவும் வியாதிகளும் பரவாமல் தடுக்கப்படும்.
- ✓ மறுசுழற்சி செய்யக்கூடிய குப்பைகளுக்கும், மறுசுழற்சி செய்யமுடியாத குப்பைகளுக்கும் தனித்தனியே தொட்டிகள் வைக்கப்படும். இந்த குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட்ட குழிகளின் மேல் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் மூடிகள் பொறுத்தப்பட்டு குப்பைகளைப் போடவும், சேகரிக்கவுமா வசதியாக இருக்கும்படி அமைக்கப்படும்.
- ✓ **SAIL** நிறுவனம், தெற்கு டில்லி மாநகராட்சியால் **(sdmc)** நிர்வகிக்கப்படும் பிக்காஜி காமா ப்ளேஸிலுள்ள ஸ்மார்ட் கார்பேஜ் நிலையங்களுக்கு இந்த குப்பைத் தொட்டிகளை வழங்கும்.

**10)** பின்வரும் நபர்களில் **2019 Templeton** பரிசு பெற்றவர் யார்**? Who is the recipient of the 2019 Templeton Prize?**

**[A] k.**சிவன்

[B] மார்செல்லோ க்ளெய்சர்

[C] G.சதிஷ் ரெட்டி

[D] ஜான் டெம்ப்பிள்டன்

- ✓ ப்ரேசிலைச் சேர்ந்த இயற்பியல் அறிஞரும் வானியலறிஞருமான மார்செல்லோ க்ளெய்சருக்கு(60) , ஆன்மிகத்தையும் அறிவியலையும் இணைக்கும் விதத்தில் அமைந்த அவரது பங்களிப்பிற்காக 1.4 மில்லியன் டாலர் மதிப்புள்ள டெம்பிள்டன் பரிசு வழங்கப்பட்டது. லத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் இந்த மதிப்புமிக்க பரிசைப் பெறுவது இதுவே முதல் முறை.
- ✓ க்ளெய்சர் கோட்பாட்டுரீதியான இயற்பியலாளர். ஆன்மீகமும் அறிவியலும் எதிரிகள் என்ற பார்வையைக் கொண்டிருக்கிறார். அறிவியலும் ஆன்மிகமும் எப்படி உயிரின் தோற்றத்தைப் பற்றிய கேள்விகளுக்கு விடை சொல்கின்றன என்பதைப் பற்றி மிக ஆழமாக ஆராய்ந்தவர்.
- ✓ டெம்பிள்டன் பரிசு வாழும் நபருக்கு வழங்கப்படுகிறது. வாழ்க்கையின் ஆன்மீகப் பரிமாணத்தில் தெளிந்த உள்நோக்குடனோ, கண்டுபிடிப்புகளைச் செய்தோ, அல்லது நடைமுறையிலோ ஒப்பற்ற பங்களிப்பைச் செய்த நபருக்கு வழங்கப்படும்.